ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1820/4 - 2013 ජූලි මස 23 වැනි අඟහරුවාදා - 2013.07.23

*1820/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அலுவலகப் பணிப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு - திருத்தம் இல. 01

2012.09.27 ஆந் திகதிய 1777/35 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அலுவலகப் பணியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினை பின்வருமாறு திருத்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.

(i) 07 ஆவது பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

III தரத்திற்குரிய அலுவலர்களுக்கான நியமனம்-

கீழே 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்பவர்களை சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தலானது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

(ii) 10.5 ஆம் பந்தி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலப் பகுதிக்குள் இரண்டாம் மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆரம்ப நிலை மொழித்திறன் பாடநெறிப் பரீட்சையில் சித்தியடைத்தல் வேண்டும்.) குறித்த காலப்பகுதியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்படும்.

(iii) பின்லரும் புதிய பந்தியானது தொகுதி 14 (ii) இற்குப் பதிலாக பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

(அ) கீழ்வரும் (ஆ) பிரிவிலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத வகுப்பு II இலுள்ள பணியாளர்கள் தரம் II இற்கு ;

(ஆ) இவ் ஆட்சேர்ப்பு நடைமுறையானது நடைமுறைக்கு வரும் திகதியன்று வகுப்பு II இல் ஒன்பது (09) வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள 1258/20 ஆம் இலக்க மற்றும் 2002.10.18 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அலுவலகப் பணியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 11.1 ஆம் பந்தியின் (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை இச்சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் தினம் முதல் தரம் I இற்கு.

(iv) *17 ஆம் பிரிவு கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.*

*இடைக்கால ஏற்பாடுகள் -*

*சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியன்று பழைய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழ் வகுப்பு* I *இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் தரம்* I *இன் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுவர். தற்போது சேவையிலுள்ள அலுவலர்களுக்கு வினைத்திறன்காண் தடையில் சித்தியடைவதற்கு இப்பிரமாணக்குறிப்பு அமுலுக்குவரும் திகதி தொடக்கம் 3 வருட சலுகைக்காலம் வழங்கப்படும். பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நிலவிய வினைத்திறன்காண் தடையில் சித்தியெய்திய தரம்* III *இலுள்ள அலுவலர்கள் முதலாவது வினைத்திறன் காண் தடையில் சித்தியடையும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுவர்.*

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

*அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7.*

*8 - 300*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*